பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
-2-11-1992

## இலங்கைப் பிரச்னையால் சர்வதேச சமூகத்திற்கு நெருக்கடி

(கொழும்பு)
இலங்கையில் உள்நாட்டு போர் தொடர்வதாலும் சர்வதேசரீதியாக பரந்த அளவில் காணப்படும் தமிழ் அகதிகள் பிரச்னையாலும் சர்வதேச சமூகம் பெரும்

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஐப்பசி 17 இதழ் 265
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 02 — 11 — 1992

## வெளிநாட்டு தூதர்கள் அரசு அதிகாரிகள் சந்திப்பு

(கொழும்பு)
இலங்கை இனப்பிரச்னை குறித்து அரசு அதிகாரிகள் சிலர் வெளிநாட்டு தூதர்கள் சிலருடன் பேச்சுக்கள் நடாத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவு முகாம் மீது புலிகள் தாக்குதல்

(கொழும்பு)
ஆனையிறவுப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்துக்குமிடையில் நேற்று முன்தினம் திடீரெனக் கடும் மோதல் ஏற்பட்டதாகக் கொழும்புச் செய்திகள் தெரி

(4-ம் பக்கம் பார்க்க)

# வடக்கு-கிழக்கு யுத்த நிலைமை குறித்து மீள்பரிசீலனைக்கு வற்புறுத்து

## படை அதிகாரிகள் கோரிக்கை

(கொழும்பு)
வடக்கு-கிழக்கு யுத்த நிலைமை பற்றி மீள்பரிசீலனை செய்யவேண்டும் என்று இராணுவ அதிகாரிகள் பலர் வலியுறுத்திவருகின்றார்களாம். இதன் மூலம் இராணுவ இழப்பைத் தடுக்க முடியும் என அவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

இராணுவ தலைமைப் பீடத்தில் அடிக்கடி ஏற்படும் மாற்றங்களால் யுத்தநிலை திசை மாறி போவதாக கருதும் ஒரு பகுதி அதிகாரிகளே இவ்வாறான அவசர கோரிக்கையை விடுக்க ஆரம்பித்துள்ளதாக 'ஐலன்ட்' தெரிவித்துள்ளது.

யுத்த நிலையைமீள்பரிசீலனை செய்வதன் மூலம் இராணுவத்திற்கு கிடைத்த வெற்றி தோல்வி, தேவைப்படும் படைபலம் ஆயுதங்கள், யுத்த தளபாடங்கள் பற்றி மதிப்பிடலாமெனவும் இவர்கள் கருதுகின்றனர்.

4-ம் பக்கம் பார்க்க)

## யுத்தம் நீடித்தால் புலிகளே வெல்வர்

(கொழும்பு)
புலிகள் ஈழம் யுத்தத்தை வெல்வதற்கு இராணுவத்தை வெற்றிகொள்ள வேண்டிய அவசியமில்லை. அவர்கள் யுத்தத்தை நீடித்தாலே போதுமானது.

இவ்வாறு 'ஐலண்ட்' பத்திரிகையில் வெளியான கட்டுரை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யுத்தம் நீடிப்பதன் மூலம் இராணுவ நடவடிக்கைக்கு அரசுநிதி வழங்க முடியாத நிலை ஏற்படுவதுடன் இலங்கையின் பொருளாதார நிலை மிக மிக மோசமாகும்.

இதனால் இதுவரை அரசு வழங்க மறுத்த சலுகைகளை வழங்க வேண்டிய நிலை ஏற்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுளது. (சி)

## ★ வவுனியா, மன்னார் படை முகாம்களுக்கு பிரதமர்

### தளபதிகளுடன் சூறாவளிப் பயணம்

(வவனியா)
வவனியா, மன்னார் பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களை பார்வையிடுவதற்காக, பிரதம மந்திரியும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு. டி பி. விஜயதுங்கா நேற்று முன்தினம் இப்பகுதிகளுக்கு தமது குழுவினருடன் திடீர் விஜயம் செய்துள்ளார்.

வவனியாப் பகுதியில் உள்ள அனைத்து இராணுவ முகாம்களுக்கும், பொலிஸ் நிலையங்களுக்கும் சென்று பாதுகாப்பு நடவடிக்கைகளை பார்வையிட்டதுடன், யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்லும் பிரயாணிகளுக்கு புதிய முறையில் ''பாஸ்'' வழங்குவது

(4-ம் பக்கம் பார்க்க)

## ★ கொக்கட்டிச்சோலை படுகொலை குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும்

(கொழும்பு)
கொக்கட்டிச்சோலைக் கொலைச் சம்பவத்தில் குற்றவாளியாகக் காணப்பட்டவர் நீதிமன்றம் கொண்டுவந்து தண்டிக்கப்படுவதை உலகம் பார்த்துக் கொண்டிருக்கிறது என்று ஒரு தமிழ் அரசியல்வாதி கூறியுள்ளார்.

(4ம் பக்கம் பார்க்க)

## புதிதாக 7000 படையினரை யுத்த முனைக்கு அனுப்ப முயற்சி

(கொழும்பு)
வடக்கு - கிழக்கு யுத்த முனைக்கு புதிதாக ஏழாயிரம் பேரை அனுப்ப இலங்கை இராணுவம் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இதற்கென புதிதாக 7000 பேரை இராணுவத்தில் சேர்க்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இராணுவ தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரத்ன தெரிவித்துள்ளார்.

புதிதாக இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுக்கு குறுகிய கால துரித பயிற்சிகள் வழங்கப்பட்டு இவர்கள் வடக்கு - கிழக்கு யுத்த முனைக்கு அனுப்பப்படுவார்களெனவும் தளபதி தெரிவித்தார். (க-சி)

## கடற்படைக்கு சிறிய ரக படகுகள்

(கொழும்பு)
இலங்கைக் கடற்படைக்குக் கரையோர பாதுகாப்புக்கென புதிய ரக சிறிய பீரங்கி படகுகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்படகுகள் சீனாவிடமிருந்து பெறப்பட்டதாகவும் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்படகுகள் மிகக் குறைந்தளவு நீரிலும் மிக வேகமாகச் செல்லக்கூடிய ஆற்றலையும் கொண்டுள்ளதாகக் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (சி)

## வயிற்றோட்டத்திற்கு 20 பேர் மரணம்

(யாழ்ப்பாணம்)
யாழ். குடாவில் தற்போது தீவிரமாகப் பரவிவரும் வயிற்றோட்ட நோயினால் 20க்கு மேற்பட்டோர் மரணமாகியுள்ளனர்.

மரணமானவர்களில் குழந்தைப் பருவத்திலிருந்து சிறுவர்கள் வரையில் 15க்கு மேற்பட்டோரும், ஏனையோர் பெரியோர்கள் எனவும் சுகா

[4ம் பக்கம் பார்க்க]

## வாழைச்சேனையில் குண்டு வெடிப்பு: ஐந்து தமிழர் படுகாய

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பில் வாழைச்சேனைப்பகுதியில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற குண்டு வெடிப்பில் ஐந்து தமிழர் படுகாயமடைந்துள்ளனர்.

தமிழருக்கு சொந்தமான புடவைக் கடைஒன்றில் 'ரின்' ஒன்றில் மறைத்து வைக்கப்பட்ட குண்டு வெடித்தபோதே ஐந்து தமிழர் படுகாயமடைந்தனர்.

கடந்த சில தினங்களுக்கு முன் முஸ்லிம் கடை ஒன்றில் குண்டுவெடித்தபோது ஒருவர் பலியானதற்கு பழிவாங்கும் நோக்கிலேயே முஸ்லிம்கள் இக்குண்டை வெடிக்க வைத்திருக்கலாமென செய்திகள் கூறுகின்றன. (சி)

**வனவளம் பெருக்கின் நீர்வளம் சுரக்கும்**

## வரி விளம்பரம்


### முடக்கொத்தான் குளிகை

முடக்கொத்தான் இலையில் தயாரித்த Welpenla capsules கிடைக்குமிடம் எஸ். ரி. மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சி-6870)

### SALES ASSISTANT

உரும்பிராயில் இயங்கவிருக்கும் ஆங்கில மருந்தகம் (Pharmacy) ஒன்றிற்கு அனுபவம் வாய்ந்த பெண் விற்பனையாளரும் வேலை பழகக் கூடிய பெண்களும் உடன் தேவை. நேரடியாகத் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:- English Pharmacy, Urumpirai. (சி-6933)

### அவசரம் தேவை

கண்ணியமான குடும்பம் ஒன்றிற்கு அமைதியான சூழலில் நல்ல வீடு வாடகைக்கு உடன் தேவை, யாழ். மாநகர சபை எல்லைக்குள்ளோ, அல்லது நல்லூர், கொக்குவில், திருநெல்வேலி போன்ற பிரதேசங்களில் விரும்பப்படும் கணிசமான வாடகை தரலாம். விளம்பர இலக்கம் C 6944 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (சி-6944)

### தவறிவிட்டது

நல்லை ஆதீனத்துக்கும் முட்டாஸ் கடைச் சந்திக்குமிடையில் 'எஸ்' அடையாளமிட்ட ஒரு மோதிரம் காணமற்போய்விட்டது. கண்டெடுத்தவர்கள் த. சிவசண்முகராசா, சிமாட்டி. யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
(ஏ-2556)

**வியாபாரம்பெருக விளம்பரம் செய்க**


# வடமராட்சி பகுதியில் மரம் நாட்டு விழா

(நெல்லியடி)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக வடமராட்சிக் கோட்ட மரம்நாட்டும் விழா கடந்த மாதம் 26ம் திகதி முதல் நேற்றுவரை கொண்டாடப்பட்டது.

வல்லை வெளியில் நடந்த மரம் நாட்டு விழாவின்போது வடமராட்சித் தளபதி செல்வமும், நெல்லியடியில் ஆரம்பிக்கப்பட்ட வைபவத்தில், வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. எஸ். அரசண்ணாவும் மரக்கன்றுகளை நாட்டி ஆரம்பித்தனர்.

புளி, மலை வேம்பு, பூவாகை சவுக்கு கல்தேக்கு, வெவ்வேள், இப்பிலிப்பில் போன்ற மரக்கன்றுகளை நெல்லியடி வீதி, உடுப்பிட்டி, கரவெட்டி கூடபுதார ஆகிய பகுதிகளில் தொடர்ந்து நாட்டப்பட்டு வருகின்றன.

இவ்வைபவத்தில், பருத்தித்துறை, புலோலி, கட்டைவேலி, உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் கலந்து சிறப்பித்தன.
(160)

# சந்திரிகாவை எம். பி.யாக்க மூத்த உறுப்பினர்கள் முயற்சி

(கொழும்பு)

ஸ்ரீ. ல. சு. கட்சியைச் சேர்ந்த திருமதி சந்திரிகா விஜயகுமாரணதுங்காவை நாடாளுமன்ற உறுப்பினராக்கும் முயற்சியில் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலர் தீவிரமாக ஈடுபட்டுவருவதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கண்டி மாவட்ட எம். பி. யான கேர்ணல் அனுருத்த ரத்வத்தைக்குப் பதிலாக சந்திரிக்கா விஜயகுமாரணதுங்க நியமிக்கப்படவிருப்பதாகவும் கட்சியின் நிர்வாகம் சம்பந்தப்பட்ட பொறுப்புகள் கேர்ணல் அனுருத்த ரத்வத்தையிடம் ஒப்படைக்கப்படலாம் என்றும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

இதேவேளையில் கட்சியின் தலைவர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவிற்கும் கட்சியின் தேசிய அமைப்பாளர் அநுரா பண்டாரநாயக்காவுக்குமிடையில் ஏற்பட்டுள்ள கருத்து மோதல்களை தீர்க்கும் முயற்சி வெற்றியளித்துவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

# 31 குடும்பங்களுக்கு இலவச திருமண பதிவு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை தும்பளை தெற்கு கிராமத்தில் 31 ஏழைக்குடும்பங்களுக்கு ஒரே நாளில் இலவசமாகத் திருமணப் பதிவுகள் நடாத்தப்பட்டுள்ளன. தும்பளை தெற்கு திருவள்ளுவர் சனசமூக நிலையத்தில் பருத்தித்துறை பிரதேசசபை சனசமூகங்களின் அனுசரணையுடன் நடைபெற்ற இத்திருமணப் பதிவுகள் விழாவிற்கு சனசமூக நிலையத்தலைவர் திரு க. வடிவேலு தலைமை தாங்கினார்

பருத்தித்துறை பிரதேச சபைச் செயலர் திரு. சட்டநாதர் செவ்வந்திநாதர் இவ்விழாவிலே பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.
(52)

# மட்டக்களப்பில் வாவிகளில் மீன்பிடிக்க அனுமதி பத்திரம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் படையினரின் கட்டுப்பாட்டுப்பகுதியில் உள்ள மீனவர்களுக்கு வாவிகளில் மீன்பிடிக்க அனுமதிப் பத்திரம் விரைவில் வழங்கப்படவுள்ளதாக மட்டக்களப்பு பிராந்திய இராணுவதளபதி பிரிகேடியர் ரேவான் குணரத்தின தெரிவித்துள்ளார்.

புதூர், வலையிறவு, வீச்சுக்கல்முனை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களுக்கு இவ் அனுமதிப்பத்திரம் வழங்கப்படவுள்ளதாக மட்டு. செயலகத்தில் நடைபெற்ற புனர்வாழ்வு பன்ரமைப்பு மாநாட்டில் தெரிவித்தார். (க)

# நீர்இறைக்கும் இயந்திரங்கள் எடுத்துவரப்பட்டன

(பண்டத்தரிப்பு)

யாழ் மாவட்ட விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாஜத்திற்கு கொழும்பிலிருந்து கப்பல் மூலம் 120 நீர் இறைக்கும் இயந்திரங்கள் வந்து சேர்ந்துள்ளன.

கடந்த நான்குமாத காலமாக சமாஜம் யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளர், யாழ், மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோர் ஊடாக அத்தியாவசிய சேவைகள் நாயகத்திடம் தொடர்பு கொண்டு பெருமுயற்சி செய்ததின் பயனாக இந்த நீர் இறைக்கும் இயந்திரங்கள் இங்கு அண்மையில் வந்த 'குமண' கப்பல் மூலம் கொண்டு வரப்

(4ம் பக்கம் பார்க்க)

# செஞ்சிலுவை சங்க ஜெனிவா பிரதிநிதிகள் அகதிமுகாம்களுக்குவிஜயம்

(பண்டத்தரிப்பு)

ஜெனிவாவிலுள்ளசர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூன்று பேரடங்கிய பிரதிநிதிகள் குழுவொன்று கடந்த வெள்ளிக்கிழமையன்று சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் செயற்பட்டு வரும் இடம்பெயர்ந்தவர்கள் தங்கியிருக்கும் அகதிமுகாம்களை நேரடியாக பார்வையிட்டனர்

முகாம்களில் தங்கியிருக்கும் அங்கவீனமுற்றவர்களையும், போஷாக்கு குறைந்தவர்களையும் இவர்கள் புகைப்படம் எடுத்து சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அகதிமுகாம்களில் இருப்பவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளை ஊடாக மருந்து வகைகளை அனுப்பிவைப்பதாகவும் இக்குழுவினர் தெரிவித்தனர்.

சண்டிலிப்பாய் பிரிவு செஞ்சிலுவைச் சங்கக் கிளை அலுவலகத்திற்கும் விஜயம் செய்து செயற்பாடுகளை பார்வையிட்டுச் சென்றனர். (72)

# தீப்பெட்டி தருவிப்பு

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாஜத்திற்கு இனிவரும் கப்பலில் தீப்பெட்டிகள், மண்ணெண்ணை மற்றும் பால்மா போன்ற நுகர்ச்சிப் பொருட்களும் வந்துசேர விருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளையில் கொழும்பிலிருந்து லொறி மூலமும் சிந்தாமணி கட்டில், லக்ஸ்பிறே ஆகியன விரைவில்வந்து சேரவிருப்பதாகவும் சமாஜத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்

இப்பொருட்கள் யாவும் யாழ் மாவட்டத்திலுள்ள அங்கத்துவ ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் விநியோகிக்கப்படவுள்ளன. [72]

# பரிசளிப்பு விழா

(பருத்தித்துறை)

யாழ். மாவட்ட செவிப்புலனற்றோர் புனர்வாழ்வுச்சங்க விளையாட்டுக்கழக இறுதி விளையாட்டுப்போட்டிகளும் பரிசளிப்புவிழாவும் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கழகத்தலைவர் திரு, எஸ். செல்வராஜா தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

தமிழீழ தேசியக்கொடியை தமிழீழ விடுதலைப்புலிகள் வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. அரசண்ணாவும் கழகக் கொடியைத் தலைவர் திரு: செல்வராஜாவும் ஏற்றி விழாவை ஆரம்பத்துவைத்தனர். [58]


## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



### சந்தியா செபஸ்ரி பிரான்சிஸ்

(பிரபல சட்டத்தரணியும், சமாதான நீதவானும், யாழ். மரணவிசாரணை அதிகாரியும்)

பிறப்பு: 03-04-1931 இறப்பு: 02-11-1990

மண்ணைவிட்டு உங்கள் உடல் மறைந்தாலும்
நம்மைவிட்டு நினைவு என்றும் மறைவதில்லை!
என்றும் தலைவனாய் எம்மை நின்று வழிகாட்டி
நல்ல நிலை காட்டி — எம்மை
குடும்பம் என்ற கோயிலில் பாதுகாத்து வந்தீர்கள்
பாதி வழியினிலே பரிதவிக்கப் போனாலும்
உங்கள் ஆசிகள் எங்களை வழிநடத்தும்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், சகோதரர், சகோதரிகள்.

202, 2-ம் குறுக்குத்தெரு.
யாழ்ப்பாணம். (ஏ-2552)

அசத்யோ நிர்வாண தீக்ஷ பஞ்ச குண்ட பக்ஷ
## ஆசார்ய அபிஷேக அழைப்பு

"சாதக கலாமணி", சாதகவித்தகர்"
"ஸாஹித்ய சங்கிரஹ"
பிரம்மஸ்ரீ
**சாம்பசிவ ஜெகதீஸ்வர சர்மா**
அவர்கட்கு
★ **ஆசார்ய அபிஷேகம்** ★
நிகழ மல்லை பழம்பதி பிள்ளாய்
ஸ்ரீதேவி கருமாரி அம்பாள் அருள்பாலித்துள்ளது.
இடம்: சிவன்கோவில், நல்லூர்
காலம்: 23ம் நாள் (8-11-92)
ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 8-54 முதல் 10-50 மணி வரை
தீக்ஷாகுரு கலாநிதி மறைத்திரு
ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார்
அவர்கள்

**வரவேற்புபசார பாராட்டுவிழா**
இடம்: நல்லை ஆதீன கலாமண்டபம
காலம்: 8-11-92 ஞாயிறு
மாலை 2 மணி — 9 மணி வரை
"முத்தமிழ் குருமணி" வாகீசவாரிதி
சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள்
தலைமையில் விழா நடைபெறும்
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.
சுபம்

இங்ஙனம்
சிவானந்த குருகுலம்
(சி-6945)

வெளிவந்துவிட்டது
## அறிவுக் களஞ்சியம்-5
226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (ஏ-2547)

# ★ கொழும்பு தமிழ்ப் பத்திரிகையின் உதவி ஆசிரியரும், முகவரும் இரகசியபொலிஸாரால் கைது

(கொழும்பு)

கொழும்பிலுள்ள தமிழ்ப் பத்திரிகை ஒன்றின் உதவி ஆசிரியரும், அப்பத்திரிகையின் விளம்பர முகவர் ஒருவரும் ரகசிய பொலிசால் அண்மையில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ராஜிவ்காந்தி கொலைச் சம்பவத்துக் முக்கிய சூத்திரதாரி என வர்ணிக்கப்படும் ஒற்றைக்கண் சிவராசனின் ஞாபகார்த்தமாக புகைப்படம் ஒன்றும், அஞ்சலிக் கவிதையும் அப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டமையையடுத்தே இவர்கள் இருவரும் இரகசியப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட படமும், அஞ்சலிக் கவிதையும் அப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டமையை இந்திய அதிகாரிகள் கண்டுபிடித்து இலங்கை அதிகாரிகளின் கவனத்திற்கு உடனடியாக கொண்டுவந்ததையடுத்தே மேற்படி இருவரும் கைது செய்யப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

சுவிஸில் உள்ள இலங்கைத் தமிழர்களினால் உள்ளூர்ப் பத்திரிகை முகவரை பயன்படுத்தி அஞ்சலிக் கவிதையில் புகைப்படமும் பிரசுரிக்கப்பட்டதாக விசாரணைகள்மூலம் தெரியவந்துள்ளதாம்.

மேற்படி முகவர் என்ற சந்தேகத்தின் பேரில் காரைநகர் தங்கோடையைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை ராமச்சந்திரன் (வயது 31) என்பவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (க-சி)

# செய்திச்சிதறல்

## குழாய்நீர் விஸ்தரிப்பு

(அரியாலை)

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் நிறுவப்பட்ட குடிநீர் குழாயிலிருந்து இணைக்கப்பட்டு பருத்தித்துறை வீதி விக்டோறியா வீதிச் சந்திக்கருகில் இன்னுமொரு குழாய் நீர் நிறுவப்பட்டுள்ளது. (59)

## ஓய்வூதிய பணிக்கொடை

(மானிப்பாய்)

கொழும்பிலிருந்த 77 பேரின் ஓய்வூதியப் பணிக்கொடைகள் யாழ். செயலக ஓய்வூதியப் பிரிவிற்கு வந்து சேர்ந்துள்ளன.

இவற்றில் 34 விதவைகள் ஓய்வூதியம் பெறுபவர்களினதும், 43 சிவில் ஓய்வூதியம் பெறுபவர்களினதும் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (71)

## சீவல் தொழிலாளர் காப்புறுதி

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள சீவல் தொழிலாளர்கள் தம்மை காப்புறுதி செய்வதற்கான திட்டமொன்றை அரசு அறிமுகப்படுத்தியுள்ளன. (123)

## ஆடை தயாரிப்பகம்

(கொக்குவில்)

கொக்குவில் மேற்கு கிராம அபிவிருத்தி சங்கம் ஆடை தயாரிப்பகம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. இதில் மேல்நாட்டு உள்நாட்டுமுறையில் தையல்வேலை நடைபெறுகின்றது-இந்நிலையத்தை யாழ் மாவட்டஉதவி பிரதேசஆணையாளர் து. வைத்திலிங்கம் திறந்துவைத்தார். (135)

## மருந்து விநியோகம்

(பண்டத்தரிப்பு)

கொழும்பிலிருந்து குமண கப்பல் மூலம் கொண்டுவரப்பட்ட இவ்வருட கடைசிக் கந்தாயத்திற்கான மருந்து வகைகள் யாழ் பிராந்தியத்திலுள்ள சகல அரசினர் வைத்தியசாலைகளுக்கும் பங்கீடு செய்யப்பட்டு விநியோகிக்கப்படவுள்ளன. (72)

## மரங்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் (பிரதேச செயலர்) பணிமனை மூலம் மரம் நடுகைக்கான கன்றுகள் விநியோகம் செய்யப்படுகின்றன.

இப்பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்டு சிறந்த முறையில் செயற்படுகின்ற சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச்சங்கங்கள் ஆகியவற்றுக்கு வழங்கி மரம் நடுகைத் திட்டத்தை ஊக்குவிக்கப்படுகிறது. (161)

## பொதுக்கூட்டம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி அரச ஓய்வூதியம் பெறுவோர் சங்கத்தின் வருடாந்தம் பொதுக்கூட்டம் நவம்பர் ஏழாம் திகதி காலை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (155)

## மண்ணெண்ணை விநியோகம்

(திருநெல்வேலி)

கல்வித்திணைக்கள உத்தியோகத்தர்கள் ஊழியர்கள், கோட்டக்கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு கல்வித்திணைக்களத்தால் ஒருவருக்கு 5 லீற்றர் வீதம் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டது. (157)

# தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்படுவது உறுதி — கருணாநிதி

(சென்னை)

தமிழகத்தில் மக்கள் விரும்பும் ஆட்சிமாற்றம் ஏற்படுவது உறுதி என தி. மு. க தலைவர் மு. கருணாநிதி கூறியுள்ளார்.

தமிழகத்தில் ஆட்சிமாற்றம் ஏற்படவேண்டும் என்று மக்கள் விரும்புகிறார்கள் என்றும், அ. இ. அ. தி. மு. கழகத்தினரின் செல்வாக்கு அண்மைக்காலமாக சரிந்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அண்மையில் சென்னையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார். (க)

## வயிற்றோட்டத்துக்கு குழந்தை பலி

(நெல்லியடி)

கரணவாய் அண்ணா இலையடியை சேர்ந்த முத்துராசா - விஜிதரன் என்னும் ஒரு வயது ஆண் குழந்தை வயிற்றோட்டத்தினால் பாதிக்கப்பட்டு கடந்த வாரம் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் மரணமடைந்தது. (160)

## விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

பாஷையூரில் மோட்டார் சைக்கிள் விபத்தில் நேற்று முன்தினமிரவு படுகாயமடைந்த பா. ஜெயபாலன யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் (159)

## மாணவர் உணவு முத்திரை

(உடுவில்)

வலிகாமம் தெற்கு உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு 1991 செப்ரெம்பர், 1992 ஏப்ரல் மே மாதங்களுக்கான இலவச உணவு முத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன. (169)

# சட்டவிரோத வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள்மீது நடவடிக்கை

(கொழும்பு)

அனுமதிப்பத்திரம் பெறப்படாது சட்டவிரோதமாக இயங்கும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள் மீது விரைவில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக தலைவர் டேவிட் சொய்சா தெரிவித்துள்ளார்.

நாட்டில் 280 பதிவுசெய்யப்பட்ட முகவர் நிலையங்கள் செயற்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க)

## முதலிடம்

(உடுவில்)

மருதனார்மடம் கல்விக் கோட்டத்தில் நடைபெற்ற ஆங்கில தினப்போட்டிகளில் சுன்னாகம் கோத்தணிப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற ஆங்கில கட்டுரைப் போட்டியில் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையைச் சேர்ந்த செல்வி ந. சித்திரா (ஆண்டு 11), செல்வி பி.பிருந்தா (ஆண்டு 8) ஆகிய இருமாணவிகளும் முதலிடம் பெற்றனர்.

மேலும் ஆங்கில வாசிப்பில் செல்வி பா. பிரசாந்தி (ஆண்டு 4) 2ம் இடத்தையும் கட்டுரை போட்டியில் செல்வி கு. மதிவதனி (ஆண்டு 9) 3ம் இடத்தையும் பெற்றனர். (109)

## ஏற்பூசி தட்டுப்பாடு

(நெல்லியடி)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையில் ஏற்பூசிக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (160)

## கருத்தரங்கு

(பண்டத்தரிப்பு)

உடுவில் கமநல சேவை நிலையத்தில் தற்காலிகமாக செயற்பட்டு வரும் கீரிமலை கமநல சேவை நிலையத்தின் ஆதரவில் விவசாயிகள் தினத்தை முன்னிட்டு மல்லாகம் கலாரைப. நோ கூ. சங்க கிளை கட்டிடத்தில் விவசாயிகளுக்கான கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. (72)

# வதிரியில் வர்த்தக நிலையத்தில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

வதிரிச்சந்தியில் உள்ள வர்த்தக நிலையமொன்றில் பெறுமதியான பொருட்கள் ரொக்கப் பணம் ஒடுபிரித்து திருடப்பட்டுள்ளது.

கடந்தமாதம் 30-ம் திகதி இரவு மேற்படி திருட்டுச் சம்பவம் நடந்துள்ளது.

சம்பவத்தில் கடைக்குக் காவலாக இருந்தவர் உணவுக்காகசென்ற குறுகிய இடைவேளையைப் பயன்படுத்தி வர்த்தக நிலைய கூரை ஒடு பிரித்து சுமார் பத்தாயிரம் ரூபா பெறுமதியான பொருட்களும் மேசை லாச்சியிலிருந்த ரொக்கப்பணமும் களவாடப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

கடை உரிமையாளர் சுப்பிரமணியம் விக்னேஸ்வரன் காவல்துறையிடம் முறைப்பாடு செய்துள்ளார். (51)

## கிளைக் குழு தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்க வண்ணார்பண்ணை கிளைக்குத் தெரிவு தாய்ச் சங்கத் தலைவர் கு. சிறில் தலைமையில் நடைபெற்றது.

தலைவராக எம். கிருஷ்ணசாமியும் உபதலைவராக ந. நாகராசாவும் செயலாளராக சி. சந்திரமோகனும் மேலும் 7 பேர் கொண்ட பொதுச்சபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். [சு]

## கண்காட்சி

(தாளையடி)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் நாகர்கோவில் மகா வித்தியாலயம், செம்பியன் பற்று றோ.க. வித்தியாலயம், மருதங்கேணி இந்து தமிழ் வித்தியாலயம் ஆகியவற்றில் விடுதலைப்புலிகளின் இயக்க வரலாறும் தென் தமிழீழ படுகொலைகளும் பற்றிய கண்காட்சி அண்மையில் வடமராட்சி கிழக்கு மாணவர் அமைப்பு மகளிர் பொறுப்பாளர் செல்வி கௌசிகாவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (163)

# விஞ்ஞான கல்விக்கு ஆங்கில தேர்ச்சி அவசியம்

(யாழ்ப்பாணம்)

"வளர்ந்து வருகின்ற நவீன விஞ்ஞான புலத்தைக் கற்பதற்கு வெளிவருகின்ற விஞ்ஞான நூல்கள், மற்றும் சஞ்சிகைகள் பெரும்பாலும் ஆங்கில மொழியிலேயே வெளிவருவதால்மாணவர் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெறுவதன் மூலம் நவீன விஞ்ஞானத்தில் தேர்ச்சியடைய முடியும்"

வட மாநிலக் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடந்த 'விந்தை' என்ற விஞ்ஞான கணித நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

செல்வன் தி. மணிமாறன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் உரையாற்றும்போது உலகளாவிய ரீதியில் எமது மாணவர்கள் முன்னேற்றமடைய விஞ்ஞானக் கல்வி மிகவும் அவசியமானது என்றார். (க)

## அமெரிக்க தேர்தல்: ஜோர்ஜ்புஷ் ஜனாதிபதியாவார்?

[வாஷிங்டன்]

அமெரிக்காவில் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் அபிப்பிராய வாக்கெடுப்புகளின்படி ஜனநாயகக் கட்சி வேட்பாளரான பில் கிளின்டனுக்கும் ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ்ஷுக்கும் இடையேயான செல்வாக்கு வித்தியாசம் வெகுவாகக் குறைந்து வருகிறது.

இந்நிலையில் ஜோர்ஜ்புஷ் தான் வெற்றிபெறுவார்என்று ஜீன்டிக்ஸன் என்ற பிரபல ஜோஸ்யர் தெரிவித்துள்ளார்.

## இராசி பலன்

02-11-1992

திங்கட்கிழமை

(தமிழுக்கு ஐப்பசி 17)

அட்டமி பி. இ. 5-12 வரை திருவோணம் முழுவதும் இராகுகாலம் காலை 7 34 முதல் 9-04 வரை சுபநேரம் பகல் 12-04 முதல் 1-34 வரை அமிர்தயோகம்.

மேடம்: தொழில் லாபம், அதிகார விருத்தி, நற்குணம்.

இடபம்: உறவினர் பகை, புத்திரிசோகம், கவலை.

மிதுனம்: மனவருத்தம், சரீர உபாதை, மதிப்பு குறைதல்.

கடகம்: புதியவேலை, தனலாபம், பெண் உதவி.

சிங்கம்; நண்பர் வருகை. குடும்பசுகம், பயணஅனுகூலம்.

கன்னி: தீய நடத்தை, வேலைக்கஸ்டம், துயரம்.

துலாம்: புத்தி தடுமாற்றம் தொழில் நஸ்டம். அலைச்சல்.

விருச்சிகம்: பதவிமாற்றம் அடிமைத்தனம், காரிய வெற்றி.

தனுசு: அச்சம், ஆவேச உணர்வு, மனசங்கடம்.

மகரம்: தொழில் சிறப்பு, இனசனவருகை, விருந்துண்ணல்.

கும்பம்: நிலைமைமாற்றம், குடும்பபிரிவு, வாக்குவாதம்.

மீனம்: தொழில் முதலீடு, கடன் வசூல், மனநிறைவு.

— ஜோஸ்யர்

## மண்ணெண்ணை விநியோகம்

(உடுப்பிட்டி)

புதுக்குடியிருப்பு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் குறைந்த விலையில் மண்ணெண்ணை விநியோகிக்கப்பட்டு வருகிறது.

அரச உத்தியோகத்தருக்கு மாதத்தில் ஆறு லீற்றர் மண்ணெண்ணை லீற்றர் 16 ரூபா வீதமும், அப் பகுதி மக்களுக்கு இதே விலையிலும் வழங்கப்பட்டு வருகிறது [160]

## திருட்டு அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சியின் பல பாகங்களிலும் திருட்டுக்கள் அதிகரித்துள்ளது.

அண்மையில் பருத்தித்துறை, வதிரி, நெல்லியடி போன்ற இடங்களில் வர்த்தக நிலையங்களில் திருட்டு நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (51)

## நிதி அதிகரிப்பு

(வேலணை)

யாழ். மாவட்டத்தில் மிகச் சிறப்பாக இயங்கி வருகின்ற முதல் தரமான சனசமூக நிலையங்கள் ஒவ்வொன்றுக்கும் 1993-ல் இருந்து 1500 ரூபா வீதம் வழங்கப்படவிருக்கின்றது.

இரண்டாம் தரமாக தெரிவு செய்யப்படுகின்ற சனசமூக நிலையங்கள் ஒவ்வொன்றுக்கும் 1000 ரூபா வீதம் வழங்கப்படும். 'ஏ' பிரிவு சனசமூக நிலையங்களுக்கு முன்னர் 600 ரூபா மட்டுமே வழங்கப்பட்டது. (75)

# 29 பொலிஸ் அதிகாரிகளும் எல்லைப்புறத்திற்கு இன்று செல்கின்றனர்

## 500 பொலிஸாரும் அனுப்பப்பட்டனர்

(கொழும்பு)

29 பொலிஸ் உயர் அதிகாரிகள் இன்று வடக்கு-கிழக்கு எல்லைப்புறப் பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என பாதுகாப்பு உயர் அதிகாரிகள் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளனர்.

மேற்படி பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு தேவையான சுடுகலன் பயிற்சிகள் களுத்துறையிலுள்ள பொலிஸ் பயிற்சித் திடலில் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

பொலன்னறுவையில் சில வாரங்களுக்குமுன் இடம் பெற்ற முஸ்லிம்கள் கொலைச் சம்பவத்தையடுத்தே இவ்வேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் தரத்திலிருந்த மேற்படி 29 பேரும் பதவி உயர்த்தப்பட்டு எல்லைப்பாதுகாப்பிற்கு அனுப்பப்படும் இவ்வேளை 500 பொலிசாரும் இப்பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளனர். (க-சி)

# பாக். ரயில் விபத்தில் 150 பேர் பலி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள பெரும் ரயில் விபத்தினால் 160 பேர் பலியாகியுள்ளனர் என்று அஞ்சப்படுகிறது.

பெர்சுவா நோக்கிச்சென்று கொண்டிருந்த பிரயாணிகள் கடுகதி புகையிரதம் கராச்சிக்கு வடக்கே உள்ளபகுதியில் தரித்து நின்ற சரக்கு ரயில் வண்டியுடன் மோதியபோதே இந்த விபத்து ஏற்பட்டது.

இந்தக் கடுகதி புகையிரதத்தில் 350 பிரயாணிகள் இருந்தனரென்றும், பெரும்பாலும் முதல் மூன்று பெட்டிகளில் இருந்தவர்கள் அநேகர் உயிரிழந்திருக்கலாமென்று அஞ்சப்படுகிறது. சடலங்களை மீட்கும் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர் என்றும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (சு)

# கல்முனை எல்லையில் பலத்த பாதுகாப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு கல்முனைப் பகுதி எல்லைப்புறக்கிராமங்களுக்கு முன்பு இருந்ததைவிட பாதுகாப்பு பலப்படுத்தப்படவுள்ளதாக பிரதமர் டி. பி. விஜயதுங்கா தெரிவித்துள்ளார்.

காரைதீவு விசேட அதிரடிப் படை முகாமில் அதிகாரிகள் மத்தியில் அண்மையில் உரையாற்றுகையிலேயேமேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

எல்லைப்பகுதிகளில் குடியேறுவோருக்கு சகல வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க)

# பலாலி முகாமிலிருந்து கடும் ஷெல் தாக்குதல்

(வட்டுக்கோட்டை)

பலாலியில் இருந்து வலி மேற்கு பிரதேசப் பகுதிகளை நோக்கி நேற்றுமுன்தினம் இரவு 11-15 மணியளவில் இராணுவத்தினரால் ஏவப்பட்ட ஷெல்கள் பண்டத்தரிப்பு, வினான், சுழிபுரம் வயற்பகுதிகளில் விழுந்து வெடித்தன.

பெரும் சத்தத்துடன் வெடித்த ஷெல்கள் நித்திரையில் இருந்த பொதுமக்களைப் பீதியடையச் செய்ததுவே தவிர குறிப்பிடத்தக்க சேதங்களை ஏற்படுத்தவில்லை.

பலாலி, மாதகல் பகுதியில் இருந்து தினமும் இரவு நேரத்தில் குறிப்பாக 10 மணிக்கும் 12 மணிக்குமிடையில் ஷெல் தாக்குதல் நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருகிறது. பொதுமக்களும் இந்த நேரத்தில் ஷெல் வருமா? வராதா? என எதிர் பார்க்கவேண்டிய நிலைதற்போது உருவாகியுள்ளது. (139-56)

# மன்னிப்புச் சபைக் குழு இன்று மட்டுநகர் விஜயம்

(கொழும்பு)

சர்வதேச மன்னிப்பு சபைக் குழு இன்று திங்கட்கிழமை மட்டக்களப்பிற்கு விஜயம் செய்யவுள்ளது.

இராணுவ நடவடிக்கையால் கிழக்கிலேற்பட்ட சேதவிபரங்கள், மற்றும் காணமல்போன தமிழ்மக்கள் பற்றிய விபரங்களையும் இக்குழு திரட்டுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக்காலமாக இலங்கையில் இடம்பெறும் மிக மோசமான மனித உரிமை மீறல்களுக்கெதிராக சர்வதேச மன்னிப்பு சபை குரலெழுப்பி வருவதும் குறிப்பிடத்தக்கது. (சி)

## மயானத்தில் கிடந்த பெண் சிசு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் நேற்றுக்காலை உடன் பிறந்த பெண் சிசு ஒன்று அநாதரவாகக் காணப்பட்ட நிலையில் பொதுமக்களால் கண்டெடுக்கப்பட்டது.

பெண் சிசுவினை உடன் அப்பகுதி கிராமசேவகர் மூலம் யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பப்பட்டு பிரசவ விடுதியின் குழந்தைகள் பராமரிப்புப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளது. [56-139]

## குண்டு வீச்சில் காயமடைந்தவர் மரணமானார்

(யாழ்ப்பாணம)

கடந்த 21-ம் திகதி வலிகாமம் பகுதியில் பொம்மர் குண்டு வீச்சுத் தாக்குதலின் போது படுகாயமடைந்து மந்திகை அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 11 நாட்கள் சிகிச்சை பெற்று வந்தவர் நேற்று முன் தினமிரவு மரணமானார்.

சரசாலை மருதங்காடு என்ற இடத்தைச் சேர்ந்த வைத்திலிங்கம் துரைச்சாமி (43 வயது) என்பவரே காயப்பட்டு யாழ். வைத்தியசாலையில் மரணமானவராவார். (56)

## நோயாளர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

நாளை செவ்வாய்க்கிழமை புறப்படும் கப்பலில் கொழும்பு செல்வதற்குத் தெரிவு செய்யப்பட்ட நோயாளர்களை இரண்டுநாட்களுக்குத் தேவையான உணவு, தண்ணீருடன் நாளை காலை 7-00 மணிக்கு யாழ்.போதனா வைத்திய சாலையில் சமூகமளிக்கும்படி வைத்தியசாலைப் பணிப்பாளரினால் கோரப்படுகின்றார்கள். (56)

## நோயாளர் திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் சிகிச்சை பெற்றுவந்த 30 க்கு மேற்பட்ட நோயாளர்களை திருமலையிலிருந்து பருத்தித்துறை துறைமுகத்தில் இறக்கிவிட்டு இங்கிருந்து 50 நோயாளர்கள் ஏற்றிக்கொண்டு குமண கப்பல் நேற்றுமாலை புறப்பட்டுச் சென்றது. (56)

## நீர் இறைக்கும்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் சோவா, பீற்றூட், கரட், லீக்ஸ், முள்ளங்கி, மிளகாய் ஆகிய விதைகளும் சமாஜத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

நீர் இறைக்கும் இயந்திரங்களும், மரக்கறி விதைகளும் சமாஜத்தில் அங்கம் வகிக்கும் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிக்கப்பட்டு அவ்வப்பகுதி விவசாயிகளுக்கு பகிர்ந்து வழங்கப்படவிருப்பதாக அறியப்படுகின்றது. (72)

## இலங்கைப் பிரச்னையால்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நெருக்கடியை சந்தித்து வருவதாக ராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்

இலங்கை தமிழ் அகதிகள் சர்வதேச நாடுகள் பலவற்றில் அகதிகளாக தங்கியிருப்பதால் அந்நாடுகள் எதிர் நோக்கும் முக்கிய பிரச்னையாக அகதிகள் பிரச்னை மாறியுள்ளது.

இலங்கையில் இனப்பிரச்னை விரைவாக தீர்க்கப்பட்டு அந்த அகதிகள் விரைவாக தீர்க்கப்பட்டு அந்த அகதிகள் விரைவாக தாயகம் திரும்பிச் செல்ல வேண்டும் என்ற அக்கறை பல நாடுகளுக்கும் தோற்றுவித்துள்ளது.

இலங்கை இனப்பிரச்னையை இலங்கை அரசு விரைவில் தீர்க்க வேண்டும் இப்பிரச்னை குறித்து தமிழ் மக்கள் மீது சர்வதேச சமூகம் ஒரு அனுதாபமான கண்ணோட்டத்தை கொண்டுள்ளதாகவும் அந்த ராஜதந்திரிகள் தெரிவித்தனர். (சி)

## வரவேற்புக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு 91/92 கல்வியாண்டில் தெரிவான கலைப் பீட புதுமுக மாணவர்களுக்கான வரவேற்புக் கூட்டம் இன்று 2-ம திகதி காலை 11-00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

## வெளிநாட்டு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இனப்பிரச்னை தீர்வுதொடர்பாக அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் தூதர்களுக்கு தெரிவிக்கப்பட்டதாம்.

இதேவேளை இனப்பிரச்னைக்குச் சமாதானத் தீர்வு அவசியம் என்பதுகுறித்து தூதர்கள் வலியுறுத்தியுள்ளனராம். [சி]

## ஆனையிறவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விக்கின்றன.

ஆனையிறவு இராணுவ முகாமின் தென்பகுதி முனையில் விடுதலைப் புலிகள் புதிய தாக்குதலை, நள்ளிரவுக்குப் பின்னர் மேற்கொண்டதாகவும், இத்தாக்குதலின் சேதம் பற்றிய விபரங்கள் இதுவரை வெளியிடப்படவில்லை என்றும் அச்செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (வி)

## வவுனியா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பற்றி அங்குள்ள அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடாத்தியுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

பிரதமருடன் முஸ்லிம் சமய கலாச்சார ராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம். அசுவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா, பாதுகாப்பு ராஜாங்க அமைச்சின் செயலாளர் ஏயர் மாஷல் வோல்டர் பெர்ணாண்டோ, கூட்டுப்படை தளபதி ஜெனரல் ஹமில்டன் வணசிங்கா ஆகியோரும் சென்றனர்.

பிரதமரும் அவர் குழுவினரும் பின்பு மாவட்டத்துக்குச் சென்று இராணுவ முகாம்களைப் பார்வையிட்டார். மன்னார் மாவட்டத்தில் சிவில் நிர்வாகத்தை நடைமுறைப் படுத்துவது சம்பந்தமாக, திருக்கேதீஸ்வரம் கோவிலில் உள்ள இராணுவ முகாமில் அதிகாரிகள் உள்ளடக்கிய கூட்டமொன்றையும் நடத்தியுள்ளார்.

மேலும் இவ்விருமாவட்டங்களிலுமுள்ள இராணுவம், பொலிஸாரின் உடனடி தேவைகள் குறித்தும் அவற்றை நிவர்த்தி செய்வது குறித்தும் படைத்தளபதிகளுடன் பேச்சுக்கள் நடாத்தினர்.

கடந்த சில தினங்களாக வடக்கு கிழக்கின் சகல பகுதியிலுமுள்ள படைமுகாம்களுக்கும் பிரதமர் சூறாவளிப் பயணமொன்றை நடாத்திவருவதும் குறிப்பிடத்தக்கது. (வி-சி-க)

## கொக்கட்டிச்சோலை

1-ம் பக்கத் தொடர்ச்சி

குற்றவாளியாகக் காணப்பட்டவருக்கு என்ன தண்டனை வழங்கப்பட்டது? என்று சேனக சரத் முனசிங்காவிடம் கேட்டபோது, அது இராணுவத் தளபதியின் கடமை என்று செய்தியாளர் மாநாட்டில் கூறினார்.

இதேவேளை இச்சம்பவத்தில் ஈடுபட்ட படையினரை இராணுவ நீதிமன்று விடுதலை செய்ததற்கு பலத்த கண்டனங்கள் எழுந்துள்ளன. (சு-சி)

## சங்கீதம், நடனம் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

க. பொ. த. (முன்னோடித் தேர்வு) சங்கீதம், நடனம், செயல்முறைப் பரீட்சை 4-ம் திகதி முதல் 50 நிலையங்களில் நடைபெறவுள்ளன. சம்பந்தப்பட்ட பிரதம தேர்வாளர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்வித் திணைக்களத்தில் நடைபெறும்.

பிரதம தேர்வாளர்கள் தாமே நேரடியாக வந்து அவர்களுக்குரிய ஆவணங்களையும், அறிவுறுத்தல்களையும் பெறவேண்டும். தேர்வு நாட்கள், தமக்குரிய அனுமதி அட்டைகளை கல்விக் கோட்டத்தின் ஊடாக அதிபரிடம் பெற்று உரிய திகதிகளில் தேர்வுக்குத் தோற்றவேண்டும்.

## வயிற்றோட்டத்துக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தார வைத்தியசாலைப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினமிரவும் யாழ். போதனா வைத்திய சாலையில் ஆண், பெண் உட்பட இருவர் மரணமாகியிருக்கின்றனர்.

வயிற்றோட்ட நோய்க்கு இலக்காகி குழந்தைகள் சிறுவர்கள் தொடக்கம் பெரியோர் வரையில் 15 க்கும் மேற்பட்டோர் தினமும் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். [56]

## வடக்கு-கிழக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதைய தலைமை போட்டியால் இந்த நிலைமை தள்ளிப்போவதாகவும் இவர்கள் கவலை தெரிவித்தனராம். (சி)

# தமிழீழ காவல்துறை பதவி வெற்றிடங்கள்

**உப பரிசோதகர் / காவலர் தரங்கள்**

கல்வித் தகைமைகள்: 8ம் வகுப்பு தொடக்கம் க. பொ. த. (உயர்தரம்) வரை.

உயரம்; 5' 6''.

வயது: 18 தொடக்கம் 30 வரை.

மேற்கூறிய தகைமையுடையவர்கள் சான்றிதழ்களுடன் 05-11-1992ம் திகதி வரை. நாவலர் வீதியிலுள்ள காவல்துறை அலுவலகத்திற்கு நேரடியாகச் சமூகம் தரவும். தபால் மூல விண்ணப்பங்கள் ஏற்றுககொள்ளப்படமாட்டாது. ஆண்/பெண் இரு பாலரும் விண்ணப்பிக்கலாம்.

இதுவரை விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாதவர்களும், நேர்முகத் தேர்வின் இறுதித் தேர்விற்கு அழைக்கப்படாதவர்களும் உடனடியாகச் சமூகம் தரவும்.

பா. நடேசன்
பொறுப்பாளர்,
காவல்துறை,
தமிழீழம்.

(எ 2557)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1992ம் ஆண்டு நவம்பர் மாதம் 2ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office, Sri Lanka under Licence Number B / 10336 / 81